3167

1166/2022

11/8/2022

AUG 2022

## சுருக்கம்

பள்ளிக்கல்வி - பள்ளிக் கட்டடங்கள் சார்பாக உரிய அமைப்பிடமிருந்து ஒப்புதல் பெறாத அனைத்து சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள் மற்றும் நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள் 01.06.2022 முதல் 31.05.2023 வரை தொடர் அனுமதி/அங்கீகாரம் வழங்க அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக்கல்வித் (எம்எஸ்)துறை

அரசாணை (1டி) எண்.221 நாள்: 10.08.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053

சுபகிருது வருடம்,ஆடி 25

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 270, பள்ளிக்கல்வித் (எக்ஸ்2) துறை, நாள். 22.10.2012.
2. அரசாணை (நிலை) எண். 134, பள்ளிக்கல்வித் (பொ.நூ.2) துறை, நாள். 18.08.2015.
3. அரசாணை (நிலை) எண். 73, பள்ளிக்கல்வித் (பொ.நூ.2) துறை, நாள். 22.04.2017.
4. அரசாணை (நிலை) எண். 167, பள்ளிக்கல்வித் (எம்எஸ்) துறை, நாள். 07.08.2018.
5. அரசாணை (நிலை) எண். 79, பள்ளிக்கல்வித் (எம்எஸ்) துறை, நாள். 06.05.2019.
6. அரசாணை (நிலை) எண். 66, பள்ளிக்கல்வித் (எம்எஸ்) துறை, நாள். 03.08.2020.
7. மெட்ரிகுலேசன்பள்ளிகள்இயக்குநரின் கடித ந.க.எண். 1166/அ1/2022, நாள் 23.03.2022 மற்றும் 30.05.2022.
8. அரசு கடித (நிலை) எண். 128/UD4(1)/2022-1, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள். 24.06.2022.

******

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாணவ/ மாணவியர்களின் நலன் கருதி பள்ளிகளில் பள்ளி வாகனங்களில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் அசம்பாவித சம்பவங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகள் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் குறித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில், பள்ளிக் கட்டடங்களுக்கான வரைபட அனுமதி உரிய அலுவலரிடம் முறையாகப் பெற்ற பின்னரே கட்டடங்கள் கட்டப்பட

வேண்டும் என ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை வெளியிடப் படுவதற்கு முன்னர்வரை பள்ளிக் கட்டடங்களுக்கான வரைபட அனுமதி, நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக்குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் பெறப்பட வேண்டும் என எவ்வித அரசாணையும் இத்துறை மூலம் வழங்கப்படாத நிலையில், உள்ளாட்சி அமைப்பிடம் பெறப்பட்ட பள்ளிக் கட்டட வரைபட அனுமதியினைக் கொண்டு பள்ளி தொடங்க அனுமதி மற்றும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளது.

2. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம், 2009-இன்படி உரிய அங்கீகாரம் பெறாமல் பள்ளிகளை நடத்துவது சட்டத்தை மீறிய செயல் என்பதைக் கருத்தில் கொண்டும், பள்ளி வாகனங்களின் தரச்சான்றினை புதுப்பிக்கவும், பள்ளிகளில் ஏற்படும் சிறு சிறு நிர்வாக பிரச்சனைகளைத் தீர்க்கவும், பள்ளிகளுக்கு அங்கீகாரம் தேவை என்பதாலும், பள்ளிகளில் பயின்று வரும் மாணவ / மாணவிகளின் நலன்கருதியும், ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்றுவரும் பள்ளிகள் உள்ளாட்சி அமைப்பிடம் பள்ளிக்கட்டட வரைபட அனுமதி பெற்றிருப்பின், அப்பள்ளிகளுக்கு "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை /உள்ளூர் திட்டக்குழுமம் / சென்னை பெருநகர வளாச்சிக்குழுமத்தில் கட்டட வரைபட அனுமதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்" என்ற நிபந்தனையுடன் 31.05.2016 வரை பள்ளிகளுக்கு தற்காலிக தொடர் அங்கீகாரம் வழங்க மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக மேலே மூன்று முதல் ஆறு வரை படிக்கப்பட்ட அரசாணைகளில் 31.05.2022 வரை பள்ளிகளுக்கு தொடர் அங்கீகாரம் வழங்க அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

3. மேலே 7-ல் படிக்கப்பட்ட கடிதத்தில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் கீழ்வருமாறு தெரிவித்துள்ளார்:-

(i) தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் (திருத்தப்பட்ட) சட்டம், 2010-இன்படி தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் பிரிவு 47A சேர்க்கப்பட்டு, இச்சட்டம், 01.01.2011 முதல் நடை முறைக்கு வரும் எனஅரசாணை (நிலை) எண்.302, வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டுத் துறை நாள். 29.12.2010-ன்படி அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

(ii) மேற்படி திருத்தப்பட்ட சட்டத்தின்படி, 01.01.2011-க்குப் பிறகு கட்டப்படும் கட்டடங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் அனுமதி வழங்குவதற்கு முன்னர், நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநரின் இசைவினைப் பெறவேண்டும்.

(iii) அரசாணை (நிலை) எண். 76, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள். 14.06.2018-ல் 01.01.2011 க்கு முன்னர் திட்டம் சாராப் பகுதியில் கட்டப்பட்ட கட்டடங்களை முறைப்படுத்த கல்வி நிறுவனங்களுக்கு வாய்ப்பு வழங்கி, நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்குநர் கட்டட

வரைபட அனுமதி வழங்குவது தொடர்பாக ஆணைவெளியிடப்பட்டுள்ளது.

(iv) பல்வேறு தனியார் சுயநிதிப்பள்ளி நிர்வாகங்கள் 01.01.2011-க்கு முன்னரும் எவ்வித உள்ளாட்சி அமைப்பிடம் இருந்தும் கட்டட வரைபட அனுமதி பெறாமல் பள்ளிக் கட்டடங்கள் கட்டியும், 01.01.2011-க்கு பின்னர் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் இசைவு பெறாமல் உள்ளாட்சி அமைப்பிடம் மட்டும் கட்டட வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு (திருத்தப்பட்ட) சட்டம், 2010-ன் பிரிவு 47A-ல் தெரிவித்துள்ள வழிமுறைகளை பின்பற்றி புதியதாக பள்ளிக் கட்டட வரைபட அனுமதி பெற வேண்டும்.

(v) மேற்காண் அரசாணையின்படி பள்ளி நிர்வாகங்கள் கட்டட வரன்முறைக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சுயநிதி மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு 31.05.2019 வரை அங்கீகாரம் வழங்கி அரசாணை (நிலை) எண். 167, பள்ளிக்கல்வி (எம்எஸ்)த் துறை, நாள். 07.08.2018 ஆணையிடப்பட்டுள்ளது.

(vi) அரசாணை (நிலை) எண். 76, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள். 14.06.2018 மற்றும் அரசாணை (நிலை) எண். 167, பள்ளிக்கல்வி (எம்எஸ்)த் துறை, நாள்.07.08.2018 ஆகியவற்றை இரத்து செய்யக்கோரி தொடரப்பட்ட நீதிப்பேராணை மனு எண். 17178/2018-ல் சென்னை உயர்நீதிமன்றம் இவ்விரு அரசாணைகளையும் இரத்து செய்து ஆணையிட்டது.

(vii) இந்நிலையில், நீதி பேராணை மனு எண். 17178/2018-ன் 10.12.2018 நாளிட்ட தீர்ப்பாணையின் மீது தெளிவுரை கோரி தனியரால் தொடரப்பட்ட மேல் முறையீட்டுமனு எண். 223/2019, 10.02.2021 நாளிட்ட தீர்ப்பாணையில் இப்பொருள் சார்ந்து அரசாணை (நிலை) எண். 76, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள். 14.06.2018-யினை பின்பற்றி செயல்பட வேண்டியது கட்டாயமில்லை எனவும் சம்பந்தப்பட்ட பள்ளிகளின் விருப்பத்தினை பொறுத்தது எனவும் கூடுதல் தலைமை வழக்கறிஞரின் கூற்றை பதிவு செய்துள்ளது. எனவே, நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதலைபெற விண்ணப்பிக்காத கல்வி நிறுவனங்களின் விண்ணப்பங்கள் இரண்டு வாரத்திற்குள் விண்ணப்பித்திடவும் அவற்றின் மீது அரசு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஆணையிட்டுள்ளது.

4. மேலும், கொரானா பரவல் காரணமாக 2020-2021ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறக்கப்படாத நிலையில் இணைய வழியாக கட்டட வரன் முறைக்கு பள்ளி நிர்வாகங்களால் விண்ணப்பிக்க இயலாதநிலை ஏற்பட்டது எனவும், பள்ளிக் கட்டட வரன்முறைக்கு விண்ணப்பித்த 811

பள்ளிகளில் 82 பள்ளிகளுக்கு மட்டுமே ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், 729 பள்ளிகளுக்கு இன்னமும் உரிய ஆணை வழங்கப்படாமல் நிலுவையாக உள்ளதைக் குறிப்பிட்டு உடன் உரிய ஆணை வழங்க தனியார் பள்ளிகள் சங்கத்தால் நீதிப்பேராணை மனு 6358 / 2022 தொடரப்பட்டு வழக்கு நிலுவையாக உள்ளது என்றும், இவ்வாறான நிலையில், பள்ளி நிர்வாகங்கள் பள்ளிக் கட்டட வரன்முறைக்கு "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு 6 மாத காலத்திற்குள் விண்ணப்பித்து அதற்கான ஆவண நகலை உரிய அலுவலரிடம் முன்னிலைப் படுத்தினால் 01.06.2022 முதல் 31.05.2023 வரை அப்பள்ளிகளுக்கு தொடர் அங்கீகாரம் வழங்கிட ஆணை வழங்குமாறு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

5. மேலே 8-ல் படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் கல்வி நிறுவனங்களின் கட்டடங்கள் முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் இணையதளம் வழியாக விண்ணப்பங்களை ஆறுமாதங்களுக்கு பெறுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க நகர் மற்றும் ஊரமைப்புத்துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

6. மேற்காண் நிலையில், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு பரிசீலினை செய்து பள்ளி மாணாக்கர்களின் நலனைக்கருதி பள்ளிக் கட்டடங்கள் சார்பாக உரிய அமைப்பிடமிருந்து ஒப்புதல் பெறாத சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள் மற்றும் நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள், "நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர்திட்டக்குழுமம் / சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு மேலே 8-ல் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் விண்ணப்பித்து அதற்கான ஆவண நகலை உரிய அலுவலரிடம் முன்னிலைப் படுத்தினால் அத்தகைய பள்ளிகளுக்கு 01.06.2022 முதல் 31.05.2023 வரை தொடர் அனுமதி / அங்கீகாரம் வழங்க பள்ளிக்கல்வி ஆணையர் / மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் / தொடக்கக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி ஆணையர்,
சென்னை -6.
தொடக்கக் கல்வி இயக்குநர்,
சென்னை -6.
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை -6.

நகல்

மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை -9.

பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின்முதன்மைத் தனிச்செயலாளர்,
சென்னை -9.

இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 10/8/22

மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்,
சென்னை-6.

ந.க.எண்: 1166/அ1/2022 நாள்: 11.08.2022

அரசாணை நகல் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.

11/8/2022
இயக்குநர்
மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம்
டிபிஐ வளாகம், சென்னை-600 005.

பெறுநர்,

அனைத்து மாவட்ட
முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

11/08/2022